**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC.No.63/2022** **Date : 27/07/2023**

**PW**1 (சந்திரசேகரராஜா த/பெ.கண்ணன் ) முதலாம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : மனு எண்.4451/2022 அனுமதிக்கப்பட்டு சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர் )**

1.முதலில் விசாரணை மூன்று மாதத்திற்குள் முடிக்க முடியவில்லை அதனால் இரண்டு முறை மூன்று மூன்று மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டது. அந்த கால நீட்டிப்பு செய்ய விசாரணை அலுவலரால் எப்போது எங்களிடம் கொடுக்கப்பட்ட மனுவை இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மூன்று மாதம் கால நீட்டிப்பு செய்ததற்கான உத்தரவில் விசாரணை அலுவலர் கொடுக்கப்பட்டதாக கூறப்படும் வேண்டுகோள் கடிதத்தை காண்பித்துள்ளோமா என்றால் பார்வை 2 ல் காண்பித்துள்ளோம். விஜயா எழுதிய வேண்டுகோள் கடிதத்தை வேண்டுமென்றே இந்த வழக்கில் தாக்கல் செய்யாமல் மறைத்துள்ளோம் என்றால் சரியல்ல. விசாரணை அலுவலர் தாக்கல் செய்த அறிக்கையில் கூறப்பட்ட குறைபாடுகளை சரிசெய்ய நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் நான் எடுக்கவில்லை. குற்ற வழக்கு தொடர்வதற்கு முன்பு வேறு நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதா என்றால் தண்ட தீர்வை நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த தொகைகளை வசூல் செய்ய மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஏதும் தொடுக்கப்பட்டதா என்றால் தண்ட தீர்வு நடவடிக்கையின் மேல்

முறையீடு மட்டுமே மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்க முடியும். அந்த தீர்ப்பை நிறைவேற்றுவதற்குதான் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பார்கள் என்றால் சரியல்ல.

2.நான் இந்த வழக்கிற்கான புகாரை 09/09/2019 அன்று காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பினேன். தண்ட தீர்வை எப்போது முடிவடைந்தது என்றால் அதுபற்றிய ஆவணங்கள் தற்போது என்வசம் இல்லாததால் அதுபற்றி கூறமுடியாது. தண்ட தீர்வு நடவடிக்கையின் உத்தரவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஒருவர் செலுத்த வேண்டிய பணத்தை செலுத்தினாரா இல்லையா என்ற விபரங்கள் அந்த தண்ட தீர்வை நடவடிக்கையின் உத்தரவை பார்த்தால் மட்டுமே தெரியவரும் என்றால் சரிதான். *(அரசாங்க வழக்கறிஞரின் உதவி தேவைபடுவதாலும், சாட்சிக்கு கால அவகாசம் தேவைபடுவதாலும் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது).*

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

CV-Rep